தேதி 09.12.2024 நேரம் மாலை 6.10 மணி

**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – சரவணகுமார்

தலைப்புச் செய்திகள்

- மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் பீமா சகி யோஜனா திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று துவக்கி வைத்தார்.
- இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்ற இளைஞர்கள் அரசியலில் ஈடுபட வேண்டிய தருணம் இது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- புதுச்சேரியில் புயல் வெள்ளம் பாதிப்பு ஆய்வுகளை நிறைவு செய்த மத்திய குழுவினர் அரசு உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.
- தேச விரோத சக்திகளை எதிர்ப்பதில் அனைத்து கட்சிகளும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

*பிரதமர் பானிபட்* (16)

பிரதமர் திரு நரேந்திர மோடி அரியானா மாநிலம் பானிபட்டில் பீமா சகி யோஜனா திட்டத்தை இன்று துவக்கி வைத்தார். ஆயுள் காப்பீடு நிறுவனத்தின் இந்த திட்டம் பெண்கள் மத்தியில் காப்பீடுகள் மற்றும் நிதி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும். 18 வயது முதல் 70 வயது வரையிலான 10 ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்த பெண்களுக்கு, முதல் 3 ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகையுடன் கூடிய, சிறப்பு பயிற்சி அளித்து, அவர்களை அதிகாரமிக்கவராக மாற்றும் நோக்கத்தில் இந்த திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் போது, கர்னல் மகாரானா பிரதாப் தோட்டக் கலை பல்கலைக் கழகத்தின் பிரதான வளாக கட்டுமான பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார். 700 கோடி ரூபாய் மதிப்பில் பிரதான வளாகம் மற்றும் 6 பிராந்திய ஆராய்ச்சி மையங்கள், 495 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட உள்ளது. இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளுக்கான ஒரு கல்லூரியும், 10 தோட்டக்கலை பிரிவுகளை உள்ளடக்கிய 5 பள்ளிகளும் கட்டப்பட உள்ளன. பயிர்களின் பல்வகைப் படுத்தல் மற்றும் தோட்டக் கலை தொழில்நுட்பத்தில் உலகத் தரத்திலான ஆய்வுகளை மேம்படுத்தும் வகையில் இந்த பல்கலைக் கழகம் செயல்படும்.

<u>பிரதமர் இளைஞர்</u>(17)

இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் அரசியலில் ஈடுபட்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டிய தருணம் இது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று அகமதாபாத் ராமகிருஷ்ணா மடம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் காணொளி வாயிலாக பேசிய பிரதமர் 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்ற இளைஞர்கள் அரசியல் உள்ளிட்ட அனைத்து பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளில் பங்கேற்று வழிநடத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

நாட்டின் சமூக மேன்மைக்கான ஆன்மிக தலைவர்களின் பங்களிப்பை பிரதமர் நிகழ்ச்சியின் போது பாராட்டினார். மேலும், நாட்டின் முன்னேற்றத்தில் ராமகிருஷ்ணா மடத்தின் பங்களிப்பையும் நினைவுகூர்ந்தார். நாடு உலகப் பொருளாதாரத்தில் 3 ஆம் இடத்தை பிடிக்க முன்னேறி வருவதாகவும், இதில் இளைஞர்களின் பங்களிப்பு மிக அவசியமான ஒன்று என்றும் தெரிவித்தார். குஜராத்தின் கட்ச் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது மீட்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் ராமகிருஷ்ணா மிஷனின் பங்களிப்பை நினைவு கூர்ந்த பிரதமர், சுவாமி

விவேகானந்தரின் நவீன அறிவியலை ஒத்த ஆன்மிக சிந்தனைகளை மேற்கொள் காட்டினார்.

<u>*பிரதமர் ராஜஸ்தான்*</u> 1(17)

இந்திய நாட்டின் ஜனநாயகம் மிக உறுதியானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இளையோர் எண்ணிக்கை மற்றும் தரவுகள், நாட்டை முன்னேற்ற பாதையில் வழி நடத்தும் முக்கிய பங்களிப்பை அளித்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இன்று ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் உயரும் ராஜஸ்தான் உலகளாவிய முதலீடு உச்சி மாநாட்டை துவக்கி வைத்து பேசிய பிரதமர், நாடு சுய சார்பை நோக்கி முன்னேறி செல்வதாக குறிப்பிட்டார். ஆத்ம நிர்ப பாரத் இயக்கம் உலகளாவியது என்றும், இதன் தாக்கமும் உலகளாவியது என்று தெரிவித்தார். உலக வல்லுனர்களும், முதலீட்டாளர்களும் இந்தியாவின் மேல் மிக ஆர்வமுடன் இருப்பதாக தெரிவித்த பிரதமர் திரு நரேந்திர மோடி, சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றங்கள் உள்ளிட்ட தாரக மந்திரம் மூலமான இந்தியாவின் வளர்ச்சி அனைத்து துறைகளிலும் தென்படுவதாக குறிப்பிட்டார்.

ராஜஸ்தான் மாநிலம் வளர்ச்சியின் புதிய உச்சங்களை தொடும் போது நாடும் புதிய உச்சங்களை தொடும் என பிரதமர் தெரிவித்தார். மேலும், ராஜஸ்தான் மாநிலம் வளர்ந்து வருவதுடன், நம்பகமானதாகவும் உள்ளதாக அவர் கூறினார். மாநிலத்தின் இயற்கை வளங்கள், நவீன தொலை தொடர்பு கட்டமைப்புகள், உயரிய கலாச்சாரம், இளைஞர் சக்தி

*பிரதமர் ராஜஸ்தான் 2(9)*

உள்ளிட்டவை முதலீடுகளை ஈர்ப்பதற்கான காரணிகளாக உள்ளதாக தெரிவித்தார்.

சுதந்திரத்திற்கு பிந்தைய 70 ஆண்டுகளில் உலகின் 11 ஆவது பெரிய பொருளாதாரமாக மாறிய இந்தியா, ஆனால், அடுத்த 10 ஆண்டுகளிலேயே குறிப்பிடத் தக்க வளர்ச்சி கண்டு, உலகின் 5 ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக மாறியது என்றும் தெரிவித்தார். இந்தியாவின் வளர்ச்சி, பிறப்பு-இறப்பு பற்றிய புள்ளி விபரங்கள், டிஜிட்டல் தரவுகள், ஜனநாயக சக்திகளை பிரதிபலிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். இந்த 3 நாள் முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான வணிக நிறுவனங்களை சேர்ந்த பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள் பங்கேற்கின்றனர்.

*முர்மு (8)*

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, நாளை புதுடெல்லியில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சி ஒன்றில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு உரையாற்ற உள்ளார். மனித உரிமைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. நமது உரிமைகள்- நமது எதிர்காலம்- தற்போது என்பது இவ்வாண்டின் மனித உரிமை தினத்தின் கருப் பொருளாகும். இந்நாளை முன்னிட்டு மன நலம் பற்றிய ஒரு நாள் தேசிய கருத்தரங்கம் நாளை நடைபெறும் என்று தேசிய மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

*__மாநிலங்களவை ட்ரோன்__* (7)

நமோ டிரோன் சகோதரி என்ற மத்திய அரசின் திட்டம் மூலம் வரும் 2026 ஆம் ஆண்டிற்குள், பெண்கள் சுய உதவி குழுவினருக்கு 15 ஆயிரம் ட்ரோன்களை வழங்க ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளதாக மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் இதனை தெரிவித்த அமைச்சகம், நானோ மற்றும் டை-அமோனியம்-பாஸ்பேட் உள்ளிட்ட உரங்களை வயலில் தெளிப்பதற்கு இத்தகைய சிறிய ரக விமானங்கள் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*__மத்திய குழு 1__* (13)

புதுச்சேரியில் ஏற்பட்ட புயல் வெள்ள பாதிப்புகள் குறித்து தலைமை செயலர் சரத் சவுகான் மற்றும் உயரதிகாரிகளுடன் மத்திய குழு இணை செயலர் திரு ராஜேஷ் குப்தா ஆலோசனை நடத்தினார். பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரியில் மத்திய குழு 2 நாட்களாக ஆய்வு மேற்கொண்டது. இன்று பிற்பகலுடன் நிறைவடைந்த ஆய்வுக்கு பின்னர் தலைமை செயலர் திரு சரத் சவுகான், அரசு செயலர்கள் திரு மோரே, திரு பஜ்கஜ்குமார் ஜா, திரு கேசவன், திரு நெடுஞ்செழியன், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் மற்றும் அரசுத் துறை இயக்குநர்களுடன் மத்திய குழுவினர் விவாதித்தனர். கூட்டத்தில் சுமார் 60 க்கும் மேற்பட்ட படக் காட்சிகள் திரையிடப்பட்டு, வெள்ள சேதங்கள் பற்றிய விவரம் மத்திய குழுவிற்கு தெளிவாக எடுத்துரைக்கப் பட்டது. சேதம் குறித்த அறிக்கை விரைவில் மத்திய அரசிடம் சமர்பிக்கப்படும் என்று தெரிவித்த மத்திய குழுவினர் புதுச்சேரியில் இருந்து புறப்பட்டனர். இந்த கூட்டம் சுமார் 30 நிமிடங்கள் வரை நீடித்தது.

மத்திய குழு 2 (13)

முன்னதாக, புதுச்சேரியில் 2ஆவது நாளாக மத்திய குழுவினர் இன்றும் ஆய்வு மேற்கொண்டனர். ஒரு குழு இணைச்செயலர் டாக்டர் ராஜேஷ் குப்தா தலைமையிலும், மற்றொரு குழு வேளாண் அதிகாரிகள் திரு. பொன்னுசாமி, திரு. பாலாஜி ஆகியோர் தலைமையிலும் ஆய்வில் ஈடுபட்டனர். மண்ணாடிப்பட்டு தொகுதிக்கு உட்பட்ட சந்தை புதுக்குப்பம், மண்ணாடிப்பட்டு, லிங்காரெட்டி பாளையம், சுத்துக்கேணி, காட்டேரிக்குப்பம் ஆகிய கிராமங்களில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்தபோது, தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், உள்துறை அமைச்சருமான திரு. நமச்சிவாயம், மழை பாதிப்புகளை அதிகாரிகளிடம் நேரடியாக விளக்கினார். சுத்துக்கேணி, லிங்காரெட்டி பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட மத்திய குழுவினரிடம், அப்பகுதி விவசாயிகள் மழையால் சேதமடைந்த மஞ்சள், மரவள்ளி, நெற்பயிர் உள்ளிட்ட பயிர்களை காட்டி தங்களது பாதிப்புகளை விளக்கினர்.

டிஜிட்டல் (6)

நாட்டின் டிஜிட்டல் உள் கட்டமைப்பு வசதிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இதுநாள் வரை 138.34 கோடி ஆதார் எண்கள் உருவாக்கப் பட்டுள்ளன. Digi Locker-ல் 37.046 கோடி பயனாளிகளின் 776 கோடி ஆவணங்கள் பாதுகாக்கப் பட்டுள்ளன. DIKSHA எனும் கல்விக்கான தளத்தில், பயனாளிகளின் வசதிக்காக 556.37 கோடி பயிற்சி பாடங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

*கிரண் ரிஜிஜூ* (8)

தேச விரோத சக்திகளை எதிர்ப்பதில் காங்கிரஸ் மற்றும் அனைத்து எதிர் கட்சிகளும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், சில விஷயங்களை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்க கூடாது என்றார். ஜார்ஜ் சோரோஸ் அறக்கட்டளையுடன் எதிர் கட்சியை சேர்ந்த மூத்த உறுப்பினர் ஒருவருக்கு உள்ள தொடர்பை சமூக ஊடகங்கள் தெரிவிப்பதாகவும், அவர் குறிப்பிட்டார்.

*மாநிலங்களவை பிஜேபி*(11)

மாநிலங்களவையில் காலியாக உள்ள இடங்களுக்கான தனது வேட்பாளர்கள் பெயரை பிஜேபி அறிவித்துள்ளது. ஆந்திரபிரதேசத்தில் இருந்து திரு. ஆர் கிருஷ்ணய்யா, ஹரியானாவில் இருந்து திருமதி ரேகா ஷர்மா, மற்றும் ஒடிசாவில் இருந்து திரு சுஜித்குமார் போட்டியிடுவதாக கட்சி தெரிவித்துள்ளது.

ஆந்திர பிரதேசத்தில் இருந்து 3 இடங்களுக்கும், ஒடிசா, ஹரியானா மற்றும் மேற்கு வங்கத்தில் தலா ஒரு இடங்களுக்கான மாநிலங்களவை இடைத் தேர்தல் அறிவிப்பை, தேர்தல் ஆணையம் சென்ற மாதம் வெளியிட்டது. இதற்கான அறிவிக்கை இம்மாதம் 3 ஆம் தேதி வெளியிடப்பட்டது. நாளை வரை மனு தாக்கல் செய்யலாம் என்றும், போட்டி இருந்தால் வரும் 20 ஆம் தேதி வாக்குப் பதிவும், எண்ணிக்கையும் நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது.

நிலசரிவு (15)

இந்தோனேஷியாவின் முக்கிய தீவுவான ஜாவாவில் இன்று காலை ஏற்பட்ட நிலச் சரிவில் குறைந்தது 10 பேர் உயிரிழந்ததாகவும், 2 பேரை காணவில்லை என்றும் அம்மாநில தேசிய பேரிடர் முகமை தெரிவித்துள்ளது. காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். கடந்த வாரம் மேற்கு ஜாவா பிராந்தியத்தின் Sukabumi மாவட்டத்தில் ஏற்பட்ட தீவிர மழையின் காரணமாக இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கனமழை காரணமாக அந்நாட்டின் பல்வேறு ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டதாகவும், 170 கிராமங்கள் பாதிக்கப்பட்டு, 3 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் தங்களது பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர் என்றும், சாலைகள், மேம்பாலங்கள் மற்றும் வீடுகள் பலத்த சேதம் அடைந்ததாகவும், உள்ளூர் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் இந்தோனேஷியாவில் வெள்ளப் பெருக்கும், நிலச் சரிவுகளும் கனமழை காரணமாக ஏற்படுவது வழக்கம்.

விளையாட்டு (8)

ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடைபெற்று வரும் மகளிர் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியின் இன்றைய ஆட்டத்தில், ஏ பிரிவில் உள்ள இந்திய- மலேஷிய அணிகள் மோத உள்ளன. இப்போட்டி இந்திய நேரப்படி இன்றிரவு 8.30 மணிக்கு துவங்கும். பி பிரிவில் உள்ள சீன தைபே – தென்கொரிய அணிகளுக்கு இடையிலான போட்டியும் நடைபெறுகிறது. நேற்று நடந்த போட்டியில் இந்தியா, பங்களாதேஷ் அணியை 13 க்கு 1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இந்திய அணியின் மும்தாஸ் கான் 4 கோலும், கணிக்கா சிவாச் மற்றும் தீபிகா தலா 3 கோல் அடித்தனர்.